## 31

# தேவனுடைய எச்சரிக்கைகளைப் புறக்கணித்தலின் தவறு

## [9:20, 21 & 11:14, 15]

செயின்ட் ஹெலென்ஸ் என்ற மலை, வாஷிங்டனின் நீல நிற ஆகாயத்தை நோக்கி நூற்றுக்கணக்கான அடிகள் உயரத்திற்கு, சாம்பல் நிறச் சேற்றைக் கக்கிற்று. விரைவிலேயே எரிமலை வெடிக்கும் என்பது அறிவியல் ஆதாரத்தில் இருந்து தெளிவாயிற்று. "எச்சரிக்கை!" அறிவிப்புகள் காவல் ஆய்வுக்கார்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் ஆகியவற்றின் ஒலிப்பெருக்கிப் பெட்டிகளில் இருந்து வெளியான உரத்துக் கூவின, பிரதான குறுக்குச் சாலைகள் ஒவ்வொன்றிலும் வைக்கப்பட்ட, பேட்டரியால் சக்தியூட்டப்பட்ட அறிவிப்புப் பலகைகளில் இருந்தும், வானொலி மற்றும் தொலைக்காட்சி அறிவிப்பாளர்களினாலும், சிற்றலை மற்றும் குடிமக்கள் அலைவரிசை இயக்குவிப்பாளர்களாலும் இந்த எச்சரிக்கை முழங்கப்பட்டது. மக்கள் தங்கள் உயிருக்காகத் தப்பி ஓடுகையில், ஏரிக்கரையோரக் கிராமங்கள், சுற்றுலாப் பயணியர் முகாம்கள், மற்றும் நடைப் பயணத் தடங்கள் ஆகியவை வெறுமையாயின.

எச்சரிக்கைகள் தரப்பட்டிருந்தும், ஹாரி என்பவர் அசைய மறுத்துவிட்டார். ஹாரி, செய்ன்ட் ஹெலென்ஸ் மலையில் இருந்து வடக்கில் ஐந்து மைல்கள் தூரத்தில் இருந்த ஸ்பிரிட் லேக் என்ற இடத்தில் ஒரு பொழுதுபோக்கு விடுதியின் காப்பாளராக இருந்தார். மலையில் பணியாற்றுபவர்கள் அவரை எச்சரித்தனர், அயலகத்தவர்கள் அவரைத் தங்களுடன் புறப்பட்டு வந்து விடும்படிக் கெஞ்சிக்கேட்டுக் கொண்டனர், மற்றும் ஹாரியின் சகோதரி தொலைபேசியில் அழைத்து, அம்முதிய மனிதரின் தலையில் புத்தியை ஏற்ற பேசமுயற்சி செய்தாள் - ஆனால் அவை எல்லாவற்றையும் ஹாரி புறக்கணித்துவிட்டார். அவர் தேசிய தொலைகாட்சியில் புன்முறுவலுடன் தோன்றி, "ஹாரியைத் தவிர வேறு எவரும் இந்த மலையைப் பற்றி அதிகம் அறிந்ததில்லை, அது இப்போது அவன்மீது பொங்கியெரியத் தைரியம் கொண்டிருப்பதில்லை" என்று கூறினார்.

*மே 18, 1980 அன்று, மலையின் மேற்பகுதிக்கு கீழே உள்ள கொதிக்கும் வாயுக்கள் வீங்கிப்புடைத்து, பூமியில் சிக்கின. ஹாரி தனக்கு முட்டைகளையும் பன்றி இறைச்சியையும் சமைத்து, உணவு துணுக்குக்களைக் கொண்டு தமது பதினாறு பூனைகளுக்கு உணவூட்டினார். புதிதாக வெட்டி ஒழுங்குபடுத்தப்பட்ட தமது புல்வெளியைச் சுற்றிலும் உள்ள கரையில் பெட்டூனியா என்ற தாவரவகையை நடத்தொடங்கினார். காலை 8:31 மணியளவில் மலையானது வெடித்துப் பொங்கிற்று.*

*அந்த எரிமலையானது, ஹிரோஷிமாவைத் தரைமட்டமாக்கிய அணுகுண்டைக் காட்டிலும் ஐநூறு மடங்கு அதிக சக்தியுடன் பொங்கி வெடித்தது. இலட்சக்கணக்கான டன்கள் எடையுள்ள பாறைகள் உருகி உருவழிந்து, ஆகாயத்தில் பத்துமைல்கள் உயரத்திற்குச் சீறிச் சென்று மறைந்தன. ஒலியைக் காட்டிலும் அதிவேகமாய்ச் செல்லக்கூடிய அதிர்ச்சி அலைகள், 150 சதுர மைல்களில் இருந்த ஒவ்வொன்றையும் தரைமட்டமாக்கின. பொங்கிவழிந்தோடிய சேறு மற்றும் சாம்பல் ஆகியவற்றினால் ஆன ஐம்பது அடிகள் உயரம் கொண்ட சுவர் ஒன்று மலையோரத்தில் உண்டாயிற்று.*

*வாஷிங்டனில் ஒருகாலத்தில் ஹாரி வாழ்ந்த மூலையில் இப்போது, எச்சரிக்கைகளைக் கவனிக்க மறுத்த பிடிவாதமான அந்த முதிய மனிதரைப் பற்றி நாட்டுப்புறப் பாடகர்கள் பாடுகின்றனர்.*[1]

*பாவிகளுக்குத் தேவனுடைய எக்காள எச்சரிக்கைகளைப் பற்றிப் பலபாடங்களில் நாம் கலந்துரையாடியுள்ளோம்: முதல் நான்கு எக்காளங்கள் ஊதப்பட்டபோது, தேவன் மக்களை அவர்களின் நிச்சயமற்ற சூழ்நிலை பற்றி எச்சரிப்பதற்கு, இயற்கைப் பேரழிவுகளைப் பயன்படுத்தினார். ஐந்தாம் எக்காளம் ஊதப்பட்டபோது, பேய்த்தனமான வெட்டுக்கிளிகள், பாவம் கொண்டு வருகிற வாதையைக் கொண்டு மனித குலத்தை வாதித்தன. ஆறாம் எக்காளம் பாவிகளை அவர்களின் உணர்வுக்குக் கொண்டுவர முயற்சி செய்வதற்கு "நரகத்தில் இருந்து குதிரை வீரர்களை" உண்டாக்கிற்று. (ஆனுல்) பதில்செயல் என்பது அந்த முதிய மனிதரான ஹாரி என்பவருடையது போலவே இருந்தது என்று கூறுதல் கவலைக்குரியதாகவே உள்ளது. பெரும்பாலும் மக்கள் தாங்கள் பெற்றிருந்த எச்சரிக்கைகளைப் பெரிதும் புறக்கணித்தனர்:*

> *அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும் கேட்கவும் நடக்கவுமாட்டதாவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டு மனந்திரும்பவுமில்லை, தங்கள் கொலைபாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும்விட்டு மனந்திரும்பவுமில்லை (9:20, 21).*

*ஏழு எக்காளங்கள் பற்றிய எனது படிப்பின்போது, 2 பேதுரு 3:9, 10 வசனங்கள் என் சிந்தைக்கு வந்தன:*

> *தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.*

*இவ்வசனங்கள் முக்கியமான சத்தியங்கள் பலவற்றைப் போதிக்கின்றன: (1) கர்த்தர் தமது வருகையைத் தாமதப்படுத்துகின்றார் - ஏனென்றால் மக்கள் கெட்டுப்போவதை/அழிவதை அவர் விரும்புவதில்லை. (2) பாவிகள் மனந்திரும்ப வேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பமாய் இருக்கிறது, ஏனென்றால் மனந்திரும்புதலின் மூலமாக மாத்திரமே அவர்கள் அவரிடத்திற்குத் திரும்ப முடியும். (3) ஒரு (குறிப்பிட்ட) வேளையில், கர்த்தருடைய பொறுமை எல்லை கடந்து போகும்/இல்லாது போகும், கர்த்தருடைய நாள் வந்துவிடும். பின்பு, அவரது எச்சரிக்கைகளை புறக்கணித்திருந்த யாவரும் அவரது கோபாக்கினையின் முழுவல்லமையையும் உணர்வார்கள். இந்த ஆய்வுக்கருத்துகள் ஒவ்வொன்றும் ஏழு எக்காளங்கள் பற்றிய வசனப்பகுதிகளில் மேம்படுத்தப் பட்டுள்ளன.*

*இந்தப் பாடத்தில் நாம், ஆறாம் எக்காளம் பற்றிய நமது படிப்பை முடிப்போம் (9:20, 21) - மற்றும் ஏழாம் எக்காளத்தை எதிர்கொள்ளுவோம் (11:14, 15).*

## *மக்கள் கெட்டுப்போக வேண்டும் என்று கர்த்தர் விரும்புவதில்லை (9:20)*

*"கர்த்தர் ... ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவரா யிருக்கிறார்" (2 பேதுரு 3:9).*

*முதல் நான்கு எக்காளங்கள், இந்த அண்டத்தின்மீது பாவத்தின் செயல்விளைவைப் பிரதிநிதித்துவப்படுத்தின, ஐந்தாம் எக்காளம் பாவியின்மீது பாவத்தின் செயல்விளைவைப் பிரதிநிதித்துவப்படுத்தியது, மற்றும் ஆறாம் எக்காளம் மற்றவர்களின்மீது பாவத்தின் விளைவைப் பற்றி அதிகம் அக்கறை கொண்டிருந்தது என்று நாம் கருத்துத் தெரிவித்திருக் கின்றோம். இவையாவும், "மனிதர்களின் சுயநிறைவு மற்றும் மேட்டிமை என்ற தற்காப்புகளினூடே தேவன் தமது வழியை ஏற்படுத்த அவற்றின்மீது தாக்கி மோதிய அவரது முயற்சிகளை" பிரதிநிதித்துவப்படுத்தின.[2] லியோன் மோரீஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *மனந்திரும்பும்படி நம்மை அழைப்பதற்கு, நமது பாவத்தின் தீய விளைவுகளைத் தேவன் பயன்படுத்துகின்றார். பேய்த்தனமான*

*சக்திகளின் விடுதலையை யோவான், மனிதகுலத்தின் பாவத்தினுடைய விளைவு என்ற வகையிலான ஒரு கண்ணோட்டத்தில் காண்கின்றார். ஆனால் இன்னொரு கண்ணோட்டத்தில் காணும்போது, இது தேவனுடைய சிட்சித்தலாக உள்ளது, தேவனுடைய சிட்சித்தல் என்பது நோக்கமற்றதாக இருப்பதில்லை, சரியான முறையில் இது பெற்றுக்கொள்ளப்பட்டால், இது திருந்துவதற்கு வழிநடத்துவதாய் இருக்க வேண்டும்.*[3]

*தேவன் ஒவ்வொரு நபரைக் குறித்தும் அக்கறை கொண்டவராய் இருக்கின்றார். அவர் யோவானின் நாட்களில் இருந்த மக்களைக் குறித்து அக்கறை கொண்டிருந்தார் (வெளிப்படுத்தின விசேஷம் 9:20), அவர் உங்களைக் குறித்து அக்கறை கொண்டுள்ளார்; அவர் என்னைக் குறித்து அக்கறை கொண்டுள்ளார்.*

## எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார் (9:20, 21)

### தேவனுடைய வேண்டுகோள்

*ஒவ்வொருவரும் மனந்திரும்பவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்: அவர் "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்புகின்றார்" (2 பேதுரு 3:9). பாவம் நம்மைத் தேவனிடத்தில் இருந்து பிரிக்கிறது (ஏசாயா 59:1, 2), மற்றும் நாம் பாவத்திலிருந்து திரும்பி, தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று அவர் விரும்புகின்றார்.*

*டேனியல் ரஸ்ஸல் அவர்கள் பின்வருமாறு கூறினார்,*

*அதனால் தான் வேதாகமம் என்பது மனந்திரும்புதலுக்கான ஒரு நீண்ட வேண்டுகோளாக உள்ளது. மக்களை மனந்திரும்பும்படி மோசே அழைக்கின்றார். தீர்க்கதரிசிகள், "மனந்திரும்புங்கள், மனந்திரும்புங்கள், நீங்கள் ஏன் சாகவேண்டும்?" என்று கதறுகின்றனர். பாலைவனமும் வனாந்திரமுமான, பண்பற்றதுமான இடத்தில் இருந்து வெளிவருகின்ற யோவான் ஸ்நானன், மனந்திரும்புதலை வற்புறுத்துகின்றார். இயேசுவின் போதனையிலும் அடிக்கடி இந்த அழைப்பு உள்ளது. "நீதிமான்களையல்ல பாவிகளை மனந்திரும்பும்படி அழைக்கவே நான் வந்தேன்." பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் … ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் …. ஆகையால் நீ மனந்திரும்பி உன் பாவங்கள் போகக் கழுவப்படும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்" என்று கூறுகின்றார். மார்ஸ் மேடையின்மீது இருந்தபடி பவுல், அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார், "இப்பொழுதோ எங்குமுள்ள மனுஷரெல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று கட்டளையிடுகிறார்" என்று அறிவித்தார். … வேதாகமம் மனிதப் பண்புகளில் செயல்முனைப்பான மாற்றங்களை ஏற்படுத்தும்படி அழைக்கிற*

> எழுச்சியூட்டும் புத்தகமாக உள்ளது; மற்றும் இது ... ஒரு மோசமான மனிதனை ஒரு நல்ல மனிதராக்குதல் அதாவது அந்த மனிதர் மனம்திரும்புதல் என்பதே தேவனுடைய முதலாவதான மற்றும் அடிப்படையான மற்றும் அத்தியாவசியமான நிபந்தனையாக உள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது.[4]

**மனிதரின் பதில்செயல்**

மனிதகுலத்தை மனந்திரும்புதலுக்குள் கொண்டுவர தேவன் தம்மால் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்தார் என்று ஏழு எக்காளங்கள் அறிவிக்கின்றன. இருப்பினும் யோவான், மனிதகுலத்தின் பெரும் பகுதியானது மனந்திரும்பாமலேயே இருந்தது என்று பதிவுசெய்ய வேண்டியிருந்தது. வசனம் 20, "அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் ... மனந்திரும்பவுமில்லை" என்று கூறுகிறது. வசனம் 21 "(அவர்கள்) ... மனந்திரும்பவுமில்லை" என்று கூறுகிறது.

வசனம் 20, 21ல் யோவான், அவர்கள் மனந்திரும்பியிராத பாவங்களைப் பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார். மக்கள் தங்களை அழித்துக் கொண்டிருந்த செயல்பாடுகள் மற்றும் எண்ணப்போக்குகள் ஆகியவற்றை தொடர்ந்து பற்றிக் கொண்டிருந்தனர் என்று அவர் கூறினார். முதலாவதாக இருதயத்தின் பாவங்கள் இருந்தன - குறிப்பாக விக்கிரக ஆராதனையின் பாவம் இருந்தது: அவர்கள், "பேய்களையும்,[5] பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும் கேட்கவும் நடக்கவுமாட்டாதவைகளாயுமிருக்கிற விக்கிரகங் களையும் வணங்காதபடிக்கு தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டு மனந்திரும்பவுமில்லை (வசனம் 20ஆ)."[6]

நீண்ட காலத்திற்கு முன்னர் தேவன் பின்வருமாறு கூறினார்,

> என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
>
> மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; ... (யாத்திராகமம் 20:3-5).

எந்தப் பாவத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியிலும், தேவனு டைய இடத்தில் வேறொருவரை அல்லது வேறொரு பொருளை வைக்கக்கூடிய அமைப்பு உள்ளது. யோவானின் வாசகர்கள் வெளிப்படுத்தின விசேஷம் 9:20ஐ வாசித்தபோது, அவர்கள் அனேகமாக "ஆசியா மைனர் பகுதியில் இருந்த புறதெய்வ வணக்கத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த எண்ணற்ற திருத்தலங்களை/கோவில்களைப்" பற்றியும், "பேரரசரை வணங்குவதற்கென்று பகுதியாகவோ அல்லது முற்றிலுமாகவோ ஒப்புக்கொடுக்கப்பட்ட கோவில்களின் எண்ணிக்கைப்

பெருக்கத்தைப்" பற்றியும் நினைத்திருக்கலாம்,[7] இன்றைய நாட்களில் அந்த "புறதெய்வ வணக்கக் கோவில்களின் விக்கிரகங்கள் ... பழம்பொருட் காட்சியகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்ட பொருட்களாக உள்ளன,"[8] ஆனால் இது, மக்கள் விக்கிரகங்களை ஆராதிப்பதை விட்டொழித்து விட்டனர் என்று அர்த்தப்படுத்துவதில்லை. சில சமூகங்களில், விக்கிரகம் என்பது பாறையின் உருவமற்ற திராட்சியாகவோ அல்லது ஒரு மரத்தின் அடிப்பகுதியாகவோ இருக்கலாம். சில மதவியலாளர்கள் மரியாள், இயேசு கிறிஸ்து மற்றும் அவர்கள் "பரிசுத்தவான்களாக" குறிப்பிட்டுள்ளவர்களின் சிலைகளுக்கு முன்பு விழுந்து வணங்குகின்றனர். இந்த நடைமுறையைப் பற்றி, எல்ட்ரெட் எக்கல்ஸ் அவர்கள் பின்வரும் விளக்கத்தை ஏற்படுத்தினார்:

> ஆராதனையின் எந்த ஒரு தவறான பொருளும் - பரிசுத்தவான், கன்னிமரியாள் அல்லது நித்தியமான குழந்தை இயேசுவின் சிலையும் கூட - ஒரு பொய்யான கடவுளாகவும் அசுத்த ஆவியாகவும் உள்ளது. பொன் அல்லது சீனக்களிமண்ணினால் ஆன சிலைகளுக்கு மாயசக்திகள் உண்டு என்று நாம் குறிப்பிடும்போது, பில்லி சூனியத்திற்குத் சமமான செயலை நாம் நடைமுறைப் படுத்துகின்றோம். ... சிலைகளை வணங்குகின்றவர்கள், பொருளினால் ஆன அந்தச் சிலையைத் தாங்கள் வணங்குவதில்லை, ஆனால் அந்த உருவம் எந்த நபரைக் குறித்து நிற்கிறதோ, அவரையே வணங்குவதாக உரிமை கோருகின்றனர். அது அவர்கள் பராமரிக்கக் கடினமான நிலைப்பாடாக உள்ளது, ஏனெனில் அவர்கள், கன்னிமேரியின் குறிப்பிட்ட சில உருவச்சிலைகள் அற்புதங்கள் செய்வதாகக் குறிப்பிடுகின்றனர் அல்லது ஒரு குறிப்பிட்ட சிலைக்கு முன்பாக ஜெபிப்பதற்காக உலகத்தின் குறுக்கே வெகுதூரம் பயணம் செய்கின்றனர்.[9]

நாம் மிக அதிகமாக சுயநீதியுடன் இருப்பதாக உணர்வதற்கு முன்னர், நம்மில் பலர் அதிகம் வீண் தன்மையுள்ள, ஆனால் உண்மையானவைபோல் உள்ள "சிலைகளை" வணங்குகின்றோம் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும்:

> ... [நம்மில் பெரும்பான்மையானவர்கள்] கருங்கல்லில் செதுக்கப்பட்ட பெரிய பறவைகளின் உருவத்திற்கு முன்பாகவோ அல்லது கல்லினால் ஆன கண்களையுடைய மரச்சிலைகளுக்கு முன்பாகவோ பணிந்துகொள்வதில்லை ... ஆனால் இன்னும் நாம் யெகோவாவுக்குப் போட்டியான பிற தெய்வங்களைக் கொண்டுள்ளோம்.
>
> பொன்னால் செய்யப்பட்ட ஒரு கன்றுக்குட்டியின் முன்பாக நாம் ஒருக்காலும் பணிந்திராதவர்களாய் இருக்கலாம், ஆனால் இன்னமும் நாம் பொன்னை வணங்குபவர்களாய் இருக்கலாம். பாகாலின் செதுக்கப்பட்ட உருவகத்திற்கு முன்பாக நாம் ஒருக்காலும் மண்டியிடாதவர்களாய் இருக்கலாம், ஆனால் ரூபாய் நோட்டில்கூட செதுக்கப்பட்ட/வரையப்பட்ட உருவம் ஒன்றுள்ளது. நம்மில்

*எவராவது, தேவனுடைய ஆராதனைக்கு மேலாக வீணானவற்றின் மீது அல்லது சுயத்தின்மீது நமது பேரார்வத்தை எப்போதாவது வைத்திருந்தது இல்லை என்று கூறமுடியுமா? இந்த வாழ்வில் நல்ல விஷயங்கள் பல உள்ளன, ஆனால் அவைகள் தேவனாக இருப்பதில்லை.[10]*

கொலோசெயர் 3:5ல் பவுல், "விக்கிரகாராதனையான பொருளாசை" என்று கூறுகின்றார். நமது வாழ்வில் நாம் எதற்கு முதலிடம் கொடுக்கின்றோமோ, அது நமது கடவுளாக உள்ளது.[11]

மனிதகுலம் மாம்சத்தின் பாவங்களைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருந்தது என்றும் யோவான் வலியுறுத்தினார். கர்த்தரை தவிர வேறு எதன்மீதாவது மையங்கொண்டுள்ள நிலையானது எவ்வித மாறுபாடுமின்றி சாவுக்கேதுவான விளைவுகளைக் கொண்டுள்ளது. விக்கிரக ஆராதனை வேரூன்றும்போது தேவபக்தியின்மை என்ற கனி விளைகிறது. பவுல், மனிதகுலத்தின் வீழ்ச்சியை அட்டவணப்படுத்துகையில் முதலில், "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், ..." என்று குறிப்பிட்டார் (ரோமர் 1:25). இது பின்வரும் வாழ்வுநடையை விளைவித்தது:

*அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:29-31).*

வெளிப்படுத்தின விசேஷம் 9ம் அதிகாரமானது, யோவானின் நாட்களில் இருந்த ஒழுக்கச் சூழ்நிலை பற்றிய உட்கண்ணோக்கை நமக்குக் கொடுக்கிறது, அது குறிப்பிட்ட நான்கு பாவங்களைப் பட்டியலிடுகிறது: "(அவர்கள்) தங்கள் கொலைபாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும்,[12] தங்கள் களவுகளையும்[13] விட்டு மனந்திரும்பவுமில்லை" (வசனம் 21).

இங்கு பட்டியலிடப்பட்ட நான்கில் மூன்று பாவங்கள் பத்துக் கட்டளைகளில் கண்டனம் பண்ணப்பட்டுள்ளன:[14] "கொலை செய்யாதிருப்பாயாக," "விபசாரம் செய்யாதிருப்பாயாக," மற்றும் "களவு செய்யாதிருப்பாயாக" என்பவை ஆறாம், ஏழாம் மற்றும் எட்டாம் கட்டளைகளாயிருந்தன (யாத்திராகமம் 20:13-15). கொலைக்கு எதிரான

*தடையானது உயிருக்குப் பாதுகாப்பாக இருந்தது. (ஆதியாகமம் 9:6; எண்ணாகமம் 35:33ஐக் காணவும்.) பாலியல் தொடர்பான பாவத்திற்கு எதிரான தடையானது உடலுக்குப் பாதுகாப்பாக இருந்தது.[15] (1 கொரிந்தியர் 6:18; எபேசியர் 5:3; 1 தெசலோனிக்கேயர் 4:3ஐக் காணவும்.) களவுக்கு எதிரான தடை உடமைக்கு பாதுகாப்பாக இருந்தது. (நீதிமொழிகள் 30:9; சகரியா 5:3; எபேசியர் 4:28ஐக் காணவும்.)*

*இந்தப் பட்டியலில் இரண்டாவதாக உள்ள - "சூனியங்கள்" என்ற - பாவம் நம்மில் சிலருக்குப் பழக்கமற்றதாக உள்ளது. "சூனியங்கள்"* ["sorceries"] *என்பது, pharmakeia[16] என்ற (கிரேக்க) வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இதில் இருந்தே நாம்* "pharmacy" *என்ற வார்த்தையைப் பெற்றுள்ளோம். இவ்வார்த்தை, "அடிப்படையில் 'மருந்துகள் (அல்லது) போதைப்பொருட்களைப் பயன்படுத்துதலைக்' குறிப்பிட்டது, ஆனால் இது 'சூனியங்களையும்'* [sorcery] *குறிக்கக்கூடும்" என்று* W. E. *வைன் அவர்கள் விளக்கப்படுத்தினார்.[17] பிந்திய இப்பயன்பாட்டைப் பற்றி வைன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *சூனியங்களில், போதைப் பொருட்களின் பயன்பாடு என்பது ... பொதுவாக, மாந்திரீக வேலைகள் இணையப் பெற்றதாகவும் உணரா அறிவினரின் சக்திகளுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகவும் இருந்தது, வேண்டுதல் செய்பவரை அல்லது நோயாளியை இது, அசுத்த ஆவிகளின் கவனத்தில் இருந்தும் அவற்றின் வல்லமையில் இருந்தும் காப்பதற்கு நிபுணத்துவத்துடன் வடிவமைக்கப்பட்ட பல்வேறு மந்திர உச்சாடனங்கள், காப்பு மந்திரங்கள் முதலியவற்றை அளிப்பதாக இருந்தது, ஆனுல் இது உண்மையில் சூனியம் வைப்பரின் உணரவியலாத ஆதாரமூலங்கள் மற்றும் சக்திகளின்மீது, வேண்டுதல் செய்பவர் மன ஈர்ப்புக் கொள்ள வைப்பதாகவே இருந்தது.[18]*

*உணரா அறிவினரின் மதங்களில், போதைப் பொருட்கள் இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவில் வாழ்பவர்களுக்கு,* peyote[19] *என்பதைப் பயன்படுத்தும்* Native American Church[20] *என்ற சபையின் செயல்முறை ஒரு நெருக்கமான உதாரணமாக உள்ளது. உலகம் முழுவதிலும் இருந்த உதாரணங்கள் பெருக்கப்பட முடியும்.[21] இருபதாம் நூற்றாண்டின் போதைப் பொருள் கலாச்சாரத்திற்கு நிச்சயமாகவே நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும்.*

*கண்டிப்பான கடந்தகாலவியலாளர் இந்த, கொலைகள், சூனியங்கள், வேசித்தனங்கள் மற்றும் களவுகள் என்பவற்றை வாசிக்கும்போது , வசனம் 21 யோவானின் நாட்களில் இருந்த மனிதகுலத்தின் நிலையைத் தனிப்பட்ட வகையில் குறிப்பிடுகிறது என்று வலியுறுத்துகின்றார். எதிர்காலவியல்/ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர், இவ்வசனப் பகுதி எதிர்காலத்தில் ஏழு ஆண்டுக் காலத்தின் போது இருக்கப்போகிற உலகத்தின் நிலையைக் கூறுகிறது என்பதில் மனநிறைவு அடைகின்றார். இருப்பினும், இவ்விரு கண்ணோட்டங்களில் எதையும் ஒப்புக்கொள்பவர்கள் அவர்களைச் சுற்றி நடப்பதைக் கவனிக்க ஒரு கணப்பொழுதை எடுக்க*

*வேண்டும் என்பதே எனது பரிந்துரையாக உள்ளது. இந்தப் பாவங்கள், மனந்திரும்பாத ஒரு உலகத்தின் குணங்களாக இருந்துள்ளன, இருக்கின்றன மற்றும் கர்த்தர் மறுபடியும் வரும் வரைக்கும் இருக்கும்.*

*யோவான், இருதயத்தின் பாவங்கள் மற்றும் மாம்சத்தின் பாவங்கள் என்ற இருவகைகளையும் பட்டியலிட்டார் என்பதை அடிக்கோடிடுவதற்கு என்னை அனுமதியுங்கள். இவ்விரண்டைப் பற்றியும் தேவன் அக்கறையுள்ளவராக இருக்கின்றார். ஆகையால் மனந்திரும்புதல் என்பது ஒரு நபரின் அகத்தையும் புறத்தையும், இருதயத்தையும் மாம்சத்தையும், சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் உள்ளடக்குவதாக இருக்கிறது. உண்மையான மனந்திரும்புதல் என்பது, ''வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவருகிறதான, சிந்தையில்/மனதில் ஏற்படும் மாற்றமாக உள்ளது'' (அப்போஸ்தலருடைய நடபடிகள் 26:20ஐக் காணவும்.) இராபர்ட் முல்ஹாலன்ட் அவர்களின் வார்த்தைகளில் கூறுவதென்றால், ''ஒரு உள்ளான மறுசீரமைப்பும் ஒரு புறம்பான மறுவடிவமைப்பும்'' தேவைப்படுகிறது.[22]*

## ஒரு வேளையில், கர்த்தருடைய பொறுமை முடிவுக்கு வரும் (11:14, 15)

*மனந்திரும்புதல் - மற்றும் அதை உடனே செய்தல் - என்பது ஏன் முக்கியத்துவமானதாக உள்ளது? ஏனென்றால் தேவனுடைய பொறுமை என்றென்றும் காத்திராது. ஒரு வேளையில் அவர், இன்னும் முயற்சிகள் மேற்கொள்ளுதல் என்பது கனியற்றதாயிருக்கும் என்று முடிவுசெய்துவிடுவார். மிகாயீல் வில்காக் அவர்கள், ''[தேவனுடைய] பொறுமையல்ல, ஆனால் பதில் செயல் செய்வதற்கான மனிதருடைய திறன் தான் தீர்ந்துபோகிறது. மனிதன் மனந்திரும்புதலுக்கான சாத்தியக்கூற்றுக்கு அப்பால் சென்று தன்னைத் தானே கடினப்படுத்திக் கொண்டுள்ளபடியால், இன்னும் வாய்ப்புக்களை அளிப்பதில் கருத்து எதுவும் இல்லை என்ற ஒரு நிலை அடையப்படுகிறது'' என்று கூறினார்.[23]*

*பின்பு, "கர்த்தருடைய நாள் இரவில் திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2 பேதுரு 3:10).*

*பிந்திய ஒரு பாடத்தில் நாம், பலமுள்ள ஒரு தூதன், "இரண்டாம் ஆபத்து கடந்துபோயிற்று, இதோ, மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது" என்று அறிவிப்பதைக் கேட்போம் (11:14). இரண்டாம் "ஆபத்து / ஐயோ" என்பது, ஆறாம் எக்காளம் ஊதப்பட்டபோது விடுவிக்கப்பட்ட அழிக்கும் சேனையாக இருந்தது. அந்த எக்காளம் மனித குலத்திற்குத் தேவனுடைய பொதுவான கடைசி எச்சரிக்கையாய் இருந்தது.[24] மெரில் சி. டென்னீ அவர்கள், ''புறக்கணிக்கப்பட்ட திருத்துதல் அழிவாகிறது, மனிதர்கள் மனந்திரும்பாவிட்டால், அவர்கள் நீக்கப்பட்டாக வேண்டும்; ஏனெனில் தேவன் என்றென்றைக்கும் பாவத்தைப் பொறுத்துக்கொண்டிருக்க*

முடியாது. ஒரு வேளையில் அவர் துன்மார்க்கத்தை நீக்கிப்போடவும் நீதியை நிலைநாட்டவும் இடைப்பட்டாக வேண்டும்" என்று எழுதினார்.[25]

ஏழாம் எக்காளமே கடைசி "ஐயோ/ஆபத்தாக" இருக்கும். ஏழாம் தூதன் (எக்காளத்தை) ஊதும்போது, "தேவரகசியம் நிறைவேறும்" (10:6). அந்தக் ''கடைசி எக்காளத்தைப்'' பற்றி அதிகாரம் 11 பின்வருமாறு கூறுகிறது:

> ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்;
> அப்பொழுது "உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும்,
> அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின;
> அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்"
> என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின (11:15).

அது நடக்கும்போது, மனந்திரும்புவதற்கான வாய்ப்பு இராதபடி என்றென்றும் கடந்துசென்றிருக்கும்!

## முடிவுரை

ஆறு எக்காளங்களைப் பின்னோக்கிப் பார்த்தலிலும், ஏழாம் எக்காளத்தை முன்னெதிர் நோக்குதலிலும் நாம், முக்கியமான பல பாடங்களைக் கற்கின்றோம்:

(1) பாவம் பயங்கரமானதாக உள்ளது.
(2) பாவம் தான் தொடுகிற எல்லாவற்றையும் அழிக்கிறது.
(3) பாவம் தேவனுக்கு எதிரணியாக உள்ளது.
(4) நாம் பாவம் செய்யும்போது தேவன் நம்மிடத்தில் இரக்கம் நிறைந்தவராகவும் பொறுமையுள்ளவராகவும் இருக்கின்றார்.
(5) நாம் தேவனுடைய இரக்கத்தில் இருந்து பயனடைய வேண்டும் என்றால், நாம் மனந்திரும்ப வேண்டும்.
(6) உண்மையான மனந்திரும்புதல் என்பது நம்மை உள்ளும் புறம்பும் மாற்றும்.
(7) காலம் குறுகியதாகவும் நிச்சயமற்றதாகவும் உள்ளது. நாம் மனந்திரும்ப விரும்பினால், அதை இப்போதே செய்ய வேண்டும்!

"எக்காளங்கள் எச்சரிக்கின்றன" என்பதே எக்காளங்களைப் பற்றி நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்ற முதன்மையான/முக்கியமான சத்தியமாக உள்ளது: தேவன், இயற்கை அழிவுகளின் மூலமாக, பாவிக்கு நேரிடுகின்ற பயங்கரமான விஷயங்களின் மூலமாக, பாவம் மற்றவர்கள்மீது கொண்டுள்ள பயங்கரமான செயல்விளைவின் மூலமாக நம்மை எச்சரிக்க முயற்சி செய்கின்றார். எனது கற்பனையில் நியாயத்தீர்ப்பின்போது யாரோ ஒருவர், ''கர்த்தாவே, நீர் ஏன் என்னை எச்சரிக்கவில்லை?'' என்று கேள்விகேட்பதையும், "ஆனால் நான் செய்தேனே! நீ வாழும் பகுதியில் சூறாவளிக்காற்று வீடுகளைப் புரட்டிப் போட்டது உனக்கு நினைவில் இல்லையா? நீ பொய்கூறிய பின்பு கொண்டிருந்த உறக்கமற்ற இரவு உனக்கு நினைவில் இல்லையா? முறிந்துபோன உடல்களுடனான அந்த

*விபத்துக்காட்சி உனக்கு நினைவில் இல்லையா? நான் திரும்பத் திரும்ப பலமுறை உன்னை எச்சரிக்க முயற்சி செய்தேனே! நீ தான் அதைக் கவனிக்கவில்லை!" என்று கர்த்தர் கவலையுடன் பதில் அளிப்பதையும் கேட்கிறேன்.*

*பல ஆண்டுகளுக்கு முன்பு நான், கிரேட்டர் ஒக்லஹாமா நகரத்தின், கிராமக் கிறிஸ்துவின் சபையில் பிரசங்கித்தபோது, காதுகேட்பதற்கான கருவியை அணிந்திருந்த கிறிஸ்தவரல்லாத ஒருவர் நான் பிரசங்கித்த வேளைகளில் அடிக்கடி வந்திருந்தார். நான் எவ்வளவு ஊக்கமாக வேண்டுகோள் விடுத்தாலும், அவர் அசைக்கப்படாதவராக நிலைத்திருந்தார். சிலவேளைகளில் நான் பிரசங்கமேடைக்குத் செல்லும்போது, அவர் தமது காதுகேட்கும் கருவியை செயல்படாதபடி அணைத்து வைத்திருந்தாரோ என்று ஆச்சரியப்பட்டேன். அந்த மனிதரைப் பற்றி எனக்கு தெரியாது, ஆனால் இன்றைய நாட்களில் பலர், கர்த்தருடைய எச்சரிக்கைகளுக்குத் தங்கள் செவிகளை அடைத்துக் கொண்டுள்ளனர் என்பதை நான் அறிவேன் (மத்தேயு 13:15). நீங்கள் என்னைப் புறக்கணிக்கின்றீர்களா இல்லையா என்பது முக்கியமல்ல, ஆனால் தேவனைப் புறக்கணித்து விடாதீர்கள் என்று நான் உங்களை கெஞ்சிக் கேட்டுக் கொள்கின்றேன்! எச்சரிக்கைகளைப் புறக்கணித்த முதிய ஹாரியைப்போல் இருந்துவிடாதீர்கள். நீங்கள் கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டியிருந்தால், அதை இன்றே செய்யுங்கள்![26]*

---

*குறிப்புகள்*

[1]The story of Harry is adapted from Billy Graham, *Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse* (New York: Avon Books, 1985), xi, xii. [2]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 123. [3]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 124. [4]Daniel Russell, *Preaching the Apocalpyse* (New York: Abingdon Press, 1935), 143-44. [5]KJV *வேதாகமத்தில்* "worship devils" *என்றுள்ளது, இது தமிழில் "பேய்களை ... வணங்கவும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் ஒரே ஒரு* devil [*பிசாசு*] *தான் இருக்கின்றான். "அசுத்த ஆவிகள்" என்பது மிகவும் சரியான சொற்றொடராக உள்ளது. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும், புறதெய்வ வழிபாடு என்பது அசுத்த ஆவிகளை வழிபடுதல் என்று கருதப்பட்டது (உபாகமம் 32:17; சங்கீதம் 106:37; 1 கொரிந்தியர் 10:20). கள்ளப்போதகம்* ["doctrines of demons"] *"பிசாசுகளின் உபதேசம்" என்று கருதப்பட்டது (1 தீமோத்தேயு 4:1).* [6]*விக்கிரகங்களுக்கு இதே போன்ற விவரிப்புகள் வேதாகமம் முழுவதிலும் காணப்படுகின்றன. உபாகமம் 4:28; சங்கீதம் 115:4-8; 135:15-18; ஏசாயா 44:12-20; எரேமியா 1:16; மீகா 5:13; அப்போஸ்தலருடைய நடபடிகள் 7:41 ஆகிய வசனங்களைக் காணவும்.* [7]Martin Kiddle, *The Revelation of St. John*, The Moffatt New Testament Commentary Series (New York: Harper & Brothers Publishers, 1940), 165. [8]Burton Coffman, *Commentary on Revelation* (Austin Tex: Firm Foundation Publishing House, 1979), 216. [9]Eldred Echols, *Haven't you Heard? There's a WAR Going On!: Unlocking the Code to Revelation* (Fort Worth, Tex.:

Sweet Publishing Co., 1995), 180. [10]David Roper, "*The Day Christ Came (Again)*" *and Other Sermons* (Dallas: Christian Publishing Co., 1964), 65.

[11]*மக்கள் தங்கள் இருதயங்களில், கர்த்தருக்குப் பதிலாக சிலவேளைகளில் வைக்கின்ற சில விஷயங்களைப் பற்றிப் பட்டியலிடும்படியாக ஜட்ஸோனியாவில் எனது வகுப்பு உறுப்பினர்களிடத்திலே கேட்டேன். அவர்கள் மனதை ஈர்க்கக்கூடிய ஒரு பட்டியலைத் தயாரித்தனர்.* [12]*Porneia என்ற கிரேக்க வார்த்தை, ஆங்கிலத்தில்* "immorality" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இந்த கிரேக்க வார்த்தை வேசித்தனத்திற்கு உரிய வார்த்தையாக உள்ளது (தமிழில் இது "வேசித்தனம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இந்த சந்தர்ப்பப் பொருளில் இவ்வார்த்தை பொதுவாக பாலியல் ரீதியான பாவங்களை குறிக்கிறது.* NIV *வேதாகமத்தில்* "sexual immorality" *என்றுள்ளது.* [13]*இந்தப் பாவங்கள், யோவானின் நாட்களில் பொதுவாகவே இருந்தன, இவைகள் நமது நாட்களிலும் பொதுவானவைகளாய் நிலைத்துள்ளன. குறிப்பிட்ட இந்த பாவங்கள், வேதவசனங்களில் அடிக்கடி ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றன (எரேமியா 7:9; ஓசியா 4:2; கலாத்தியர் 5:19-21 ஆகிய வசனங்களைக் காணவும்).* [14]*நாம் இனியும் பத்துக் கட்டளைகளைப் போன்றவற்றினால் கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதில்லை, ஆனாலும் பத்தில் ஒன்பது கட்டளைகள் புதிய ஏற்பாட்டில் திரும்பவும் கூறப்படுகின்றன, இவற்றில் வசனம் 21ல் பட்டியலிடப்பட்டுள்ள பாவங்களும் உள்ளடங்கும் (ரோமர் 13:9ஐக் காணவும்). ("ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்ற நான்காவது கட்டளையானது, பத்துக் கட்டளைகளில் புதிய ஏற்பாட்டில் திரும்பக்கூறப்படாத கட்டளையாகும்.)* [15]*இந்தத் தடையானது திருமணத்தையும் இல்லத்தையும்கூடப் பாதுகாத்தது.* [16]*இந்த கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாட்டில் மூன்று முறைகள் வருகிறது: இங்கும், வெளிப்படுத்தின விசேஷம் 18:23லும் மற்றும் கலாத்தியர் 5:20லும்* . KJV *வேதாகமம் இவ்வார்த்தையை கலாத்தியர் 5:20ல்* "witchcraft" *என்று மொழிபெயர்த்து உள்ளது. ஆனுல்* NKJV *வேதாகமத்தில்* "sorcery" *என்றுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 9:21ல்* NIV *வேதாகமம்* "magic arts" *என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது, ஆனுல் 18:3ல்* "magic spell" *என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது;* "conjuring" *(மாயவித்தை) மற்றும்* "sorcery" *(சூனியம்) என்பவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுவது மதிப்புள்ளதாயிருக்கும்: புகழ்பெற்ற மாயவித்தைக்காரர்கள் ("மந்திரவாதிகள்") தங்கள் வித்தைகளை, இரகசியமாக உணரா அறிவினரின் சக்தியுடன் செய்வதாக நடிப்பதில்லை; அவர்களின் "மாயவித்தைகள்" என்பவை, கூட்டத்தில் உள்ளவர்கள் கண்டறிய முயற்சி செய்யும் புதிர்கள் போன்றவைகளாகவே உள்ளன.* [17]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis, Minn.: Bethany House Publishers, 1984), 1064-65. [18]Ibid, 1065. [19]"Peyote" *என்பது தென்மேற்கு அமெரிக்காவிலும் வடக்கு மெக்சிகோவிலும் காணப்படுகிற, முட்கள் இல்லாத கற்றாழைச் செடியாகும். இது பற்பல நிறங்கள் மற்றும் அலங்கோலமாக்கப்பட்ட இடநிலை பற்றிய ஆகியவற்றினால் பண்புபடுத்தப்பட்ட மயக்கங்களை உண்டாக்கக்கூடிய ஆல்க்கலாய்டு மெஸ்கெலைன் என்ற பொருளைக் கொண்டுள்ளது. இந்த மயக்கங்கள் தகவல் பெறாதவர்களினால் "தரிசனங்கள்" என்று கருதப்படுகின்றன.* [20]The Native American Church *என்பது, பல பழங்குடி இனங்களில் இருந்து வந்த சில அமெரிக்க இந்தியர்களைக் கொண்ட மத அமைப்பாகும், இது பெரும்பாலும் அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் உள்ளது. இந்த சபையானது, கிறிஸ்தவத்தின் போதனைகள் சிலவற்றை, பெயோட்* (peyote) *என்ற போதைப் பொருளின் ''அருட்சாதனப்'' பயன்பாட்டுடன் ஒன்றிணைக்கிறது.*

[21]*உங்கள் மாணவர்களுக்கு நன்கு பழக்கமான உதாரணங்களைப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம்.* [22]M. Robert Mulholland, Jr., *Revelation: Holy Living in an Unholy World,* Francis Asbury Press Commentary, gen. ed. M. Robert Mulholland, Jr. (Grand Rapids, Mich.: Francis Asbury Press 1990), 199. [23]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation,* The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 102. [24] *ஏழு கலசங்கள் இன்னும் வரவேண்டியிருக்கின்றன (அதிகாரங்கள் 15 மற்றும் 16), ஆனால் கலசங்களின் வலியுறுத்தமானது, எச்சரிக்கை என்பதன் மீதல்ல, தண்டனை என்பதன் மீதே இருக்கும்.* [25]Merrill C.Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 44. *வெள்ளப் பெருக்கிற்கு முன்பிருந்த உலகம், சோதோம் கொமோரா, பாபிலோன் மற்றும் எருசலேம் ஆகியவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் டென்னி அவர்கள் தமது கருத்தை விவரித்தார்.* [26]*நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், கிறிஸ்தவரல்லாதவர் தேவனிடத்திற்கு வருதல் எவ்வாறு என்றும், கிறிஸ்தவராயிருந்து தவறு செய்கின்றவர் திரும்புவது எவ்வாறு என்றும் விளக்கம் அளியுங்கள். இந்தப் புத்தகத்தில் காணப்படும், "தேவனுடைய அழைப்பு" மற்றும் "பாவத்தின் சுய அழிவுத்தன்மை" ஆகிய பாடங்களின் முடிவுரையைக் காணவும்.*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

*1. நீங்கள் எப்போதாவது ஒரு எச்சரிக்கையைப் புறக்கணித்து, அதனால் ஏற்பட்ட விளைவுகளினால் துன்புற வேண்டியிருந்ததா?*

*2. பாவத்தின் பயங்கரமான விளைவுகள் மனந்திரும்புதலை உண்டாக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் - ஆனால் அது அவ்வாறு உண்டாக்குகிறதா! (9:20, 21ஐக் காணவும்.) இன்றைய நாட்களைப் பற்றிய விஷயம் என்ன? பாவம் என்பது இன்னமும் பயங்கரமான விளைவுகளைக் கொண்டு வருகிறது, ஆனால் இது பெரும்பான்மையான மக்களிடத்தில் செயல்விளைவை ஏற்படுத்துகிறதா?*

*3. விக்கிரக ஆராதனை என்பது இன்றைய நாட்களிலும் ஒரு பிரச்சனையாக உள்ளதா?*

*4. வசனம் 21ல் குறிப்பிட்டுள்ள நான்கு பாவங்களைப் பற்றிக் கலந்துரையாடவும். இந்த பாவங்கள் இன்றைய நாட்களிலும் மேலோங்கியுள்ளனவா?*

*5. ஒருநாளில் தேவன், மக்களை அவரிடத்தில் கொண்டு வருவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்யக் காரணம் எதுவும் இல்லை என்று முடிவு செய்வாரா? அப்போது என்ன நடக்கும்? நியாயத்தீர்ப்பின் நாளுக்கு நீங்களும் நானும் எவ்வாறு தயாராக முடியும்?*